பரி.பவுல்

# அஹமதி தமிழ் திருச்சபை

குவைத்



" இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார். இனித் தீங்கைக் காணாதிருப்பாய். "

செப்பனியா 3:15

இதழ்:09 ★ மலர்:34

## செய்திமலர்

## செப்டம்பர் 2026

www.ahmaditamilchurch.com

# முதன்மை ஊழியரிடமிருந்து



**" கர்த்தர் உங்களை உயர்த்துவார்."**

கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகள். இம்மட்டும் நம்மையும் நம் குடும்பத்தையும், நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. கடந்த மாதம் ஆராதனைகளை ஜெபக்கூடுகைகளை நடத்த தேவன் பாராட்டின கிருபைகளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். 2026_ம் ஆண்டின் 9_வது மாதத்தில் பிரவேசிக்கச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

இந்த மாதத்தில் நடக்கவிருக்கும் ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள், ஊழியங்கள் யாவும் கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி பரிசுத்த ஆவியானவர் முன்னின்று நடத்தித்தர ஜெபிப்போம். விடுமுறைக்கு செல்லுகிறவர் களுக்காகவும் விடுமுறையை முடித்து வரவிருக்கும் சபையின் குடும்பங்கள் யாவரையும் கர்த்தர் சுகபத்திரமாய் காத்து நடத்திவர ஜெபிப்போம். விடுமுறைகளை முடித்து பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கல்வியை தொடரவிருக்கும் நம் சபையின் பிள்ளைகள் சகல ஞானத்திலும் சிறந்து விளங்க கர்த்தர் ஞானத்தை தரும்படி ஜெபிப்போம். கர்த்தரின் காக்கும் கரம் நம் எல்லோருடைய கரங்களையும் பற்றி நடத்துவார்.

**"இந்த காரியம் என்னமாய் முடியும் என்று நீ அறியுமட்டும் பொறுத்திரு" (ரூத். 3:18)**

தேவனுக்கு பிரியமானவர்களே! ரூத் கடந்து வந்த பாதை மிக கடினமானது என்று சொல்லிவிட்டு நாம் கடந்து சென்றுவிட முடியாது. ஏனென்றால் அவள் தன் கணவனை இழந்தாள், அவனால் உண்டாகும் உதவியை, ஆதரவை, அன்பை பராமரிப்பை... ... சகலவற்றையும் இழந்திருந்தாள். இருக்கிறது என்று சொல்வதற்கு அவளிடம் ஒன்றே ஒன்றுதான் இருந்தது. எந்த உதவியும், ஆதரவும், ஆஸ்தியும் இல்லாத அவளுடைய வயது முதிர்ந்த அத்தை / மாமியார் நகோமி. அந்த நகோமியை சுமக்கும் பாரமும் ரூத்தின் மேலே நிலைத்திருந்தது.

சொந்த சுமையையே தூக்கி சுமப்பதற்கு மிகுந்த பாரமாய் இருந்தாலும், திருமண பந்தத்தால் வந்த நகோமியின் பாரத்தையும் ரூத் உதறித்தள்ளாமல் அதை சுவையாகவே தூக்கி சுமக்க ஆரம்பித்தாள். வறுமையும் அவளை விடாது ஒட்டிக் கொண்டே இருந்தது. **“உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்: உம்முடைய தேவன் என்னுடைய தேவன்”** (ரூத். 1:16) என்று சொன்ன ரூத்தின் விசுவாச அறிக்கையானது அவளுடைய வாழ்க்கையில் கலந்திருந்த எந்த கசப்புமே அவளை வீழ்த்த முடியாமல் காத்துக் கொண்டது. கர்த்தர் அவளுடைய கசப்பை மதுரமாய் மாற்றி திருப்தியாக்கி நடத்தினார்.

ரூத்தும் கர்த்தர் மேல் பாரத்தை வைத்து காத்திருந்தபடியினால், பொறுத்திருந்தபடியினால் மத்தேயு 1:5 சொல்லுகிறது, **“போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான்”** என்றும் தொடர்ந்து ஓபேத்தின் சந்ததியில் இயேசு இரட்சகர் பிறந்தார் என்றும். இந்த மகிமையான பாக்கியம் ரூத்திற்கு கர்த்தர் கிடைக்கப் பண்ணினார் என்றும் வேதம் விளங்கப்பண்ணுகிறது. நாமும் எந்த சூழ்நிலையிலும் எதைக் குறித்தும் முறுமுறுக்காமல் கர்த்தர் மேல் வைக்கிற விசுவாசத்தோடு காத்திருக்கும் பொழுது, கர்த்தர் நம்மையும் உயர்த்துவார். அவரின் நாமம் நம்மில் மகிமையடையும்படி மேலான காரியங்களை செய்வார். தேவன் விட்டுச் சென்ற சமாதானம் நம் குடும்பங்களில் சதாகாலங்களும் நிலைத்திருப்பதாக. கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரோடும் கூட இருப்பாராக. ஆமென்..

கர்த்தர் கிருபையில்

சகோ. ஆரோக்கியதாஸ். P

# இனி தீங்கை காணாதிருப்பாய்

கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி உன் சத்துருக்களை விலக்கினார்: இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார். இனி தீங்கைக் காணாதிருப்பாய்.செப்பனியா 3:15.
ஆம் கர்த்தர் நம் தண்டனைகளை அகற்றினார் நம் சத்துருவைத் துரத்திவிட்டார்: இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் நம் நடுவிலிருக்கிறார்: இனி தீங்கைக் காணாதிருப்போம்.

## 1. கடந்த தண்டனைகள் அகற்றப்படுகின்றன.

தேவன் நம்முடைய கடந்த காலத்தை வைத்து நம்மை என்றென்றும் நடத்துவதில்லை.

## 2. சத்துருவின் அதிகாரம் நீக்கிப்படுகிறது.

உலகத்திலிருக்கிறவனைவிட பெரியவர் நம்மோடு இருக்கிறார்.

## 3. இனி தீங்கைக் காணாதிருப்பாய்.

நாளை என்ன நடக்கும் என்கிற பயத்தில் வாழ வேண்டாம். கர்த்தர் நம் நடுவில் இருப்பதால் அவர் நம்மை வழி நடத்தி காத்துக் கொள்ள வல்லவராய் இருக்கிறார்.

ஒரு கிராமத்தில் ஒரு சிறிய வீட்டில் ஒரு தாய் தன் மகனுடன் வாழ்ந்து வந்தாள். ஒரு நாள் இரவு பெரிய புயல் வந்தது. காற்று பலமாக வீசியது மழை கொட்டியது. வீட்டின் கூரை உடைந்து விழும் நிலையில் இருந்தது மகன் பயந்து அம்மா நாளைக்கு என்ன ஆகுமோ? நம் வாழ்க்கை முடிந்து விடுமோ? என்று அழுதான். அம்மா அவனை அனைத்துக் கொண்டு மகனே இந்த புயல் நம்மை பயமுறுத்தலாம். ஆனால் புயல் எப்போதும் இருக்காது. கர்த்தர் நம்மோடு இருக்கிறார். நாம் அவரை நம்புவோம் என்றார்.

அவர்கள் இருவரும் ஜெபித்தார்கள் அடுத்த நாள் காலை புயல் நின்று விட்டது. சூரியன் பிரகாசித்தது. வீடு சேதமடைதிருந்தாலும் அவர்கள் இருவரும் பாதுகாப்பாக இருந்தார்கள் மகன் ஆச்சரியத்துடன் அம்மா நேற்றிரவு நான் எல்லாம் முடிந்துவிட்டது என்று நினைத்தேன் ஆனால் இன்று நாம் பாதுகாப்பாக இருக்கிறோம் என்றான். அம்மா சிரித்துக் கொண்டு சொன்னாள் புயல் வந்தால் தேவன் நம்மை விட்டுவிடவில்லை. புயலின் நடுவிலும் அவர் நம்மோடு இருந்தார்.

நம் வாழ்க்கையிலும் சில நேரங்களில் புயல் போல பிரச்சனைகள் வரலாம். ஆனால் பிரச்சனைகள் வந்தது என்பதால் தேவன் நம்மை கைவிட்டார் என்று அர்த்தமல்ல. இன்றைய பிரச்சனை உன் நாளைய வாழ்க்கையை தீர்மானிக்காது. கர்த்தர் உன்னோடு இருந்தால் புயலுக்குப் பிறகு நிச்சயமாக அமைதி வரும்.

பயப்படாதே, கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார். மற்றும் கடந்த கண்ணீருக்குப் பதிலாக நம்பிக்கையையும் அவர் தருவார். இனி நீ தீங்கைக் காணாதிருப்பாய் என்ற கர்த்தருடைய வார்த்தையைப் பற்றிக்கொள்.

கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரோடும் கூட இருப்பாராக.. ஆமென்

கர்த்தர் கிருபையில்

சகோதரர். தாமஸ்

## நான்கு வகையான ஜெபம்.

1. மனங்கசந்து அழுது ஜெபிக்கும் ஜெபம்
2. போராடி ஜெபிக்கும் ஜெபம்
3. இருதயத்தை ஊற்றி ஜெபிக்கிற ஜெபம்
4. ஸ்தோத்திர ஜெபம்

## சகோதரிகள் பகுதி

# பக்தி வைராக்கியம்

II இராஜாக்கள் 10:16 _நீ என்னோடே கூட வந்து கர்த்தருக்காக எனக்கு இருக்கிற பக்தி வைராக்கியத்தைப் பார் என்றார். அப்படியே இவனை அவன் இரதத்தின் மேல் ஏற்றினார்கள். இந்த வார்த்தை இஸ்ரவேலின் ராஜா யெகூ ரேகாபின் குமாரனாகிய யோனதாபை நோக்கி சொல்லுகிற வார்த்தை.

யெகூ யோசபாத்தின் மகன் நிம்சியின் பேரன். இஸ்ரவேலுக்கு ராஜாவாக தேவனால் அபிஷேகம் பெற்றவர். ஏலிசா தீர்க்கதரிசி மூலம் கட்டளை வந்தது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் உன்னை இஸ்ரவேல் ஜனத்தின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறேன் II இராஜாக்கள் 9:6_7.

1.சமாரியாவுக்கு வந்து ஆகாபின் வீட்டிற்கு எலியா மூலம் சொல்லப்பட்ட கர்த்தருடைய வார்த்தையின் படி நடந்தது.

2. எசபேலின் அழிவு II இராஜாக்கள் 9:31_34

3.பாகால் வழிபாட்டை அழித்தல் பாகாலின் தீர்க்கதரிசிகள் ஆசாரியன் அனைவரையும் ஒன்று கூட்டி அழித்தார்.

அந்த காலத்தில் இஸ்ரவேலில் இருந்த விக்கிரக ஆராதனை ஒழிக்கப்பட்டது. II இராஜாக்கள் 10:10_11.

கர்த்தருக்காய் இந்த காரியங்களில் வைராக்கியம் பாராட்டி இருந்தாலும் II இராஜாக்கள் 10:29_ல் ஆனாலும் பெத்தேலிலும் தாணிலும் வைத்தபொற்கன்றுக் குட்டிகளால் இஸ்ரவேலைப் பாவஞ் செய்யப் பண்ணினநேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களை யெகூ விட்டுவிலகவில்லை II இராஜாக்கள் 10:30. கர்த்தர் யெகூவை நோக்கி என் பார்வைக்குச் செம்மையானதை நீ நன்றாய்ச்செய்து என் இருதயத்தில் இருந்த படியெல்லாம் ஆகாபின் குடும்பத்துக்குச் செய்த படியினால் உன் குமாரர் இஸ்ரவேலுடைய

சிங்காசனத்தின் மேல் நாலு தலைமுறையாக வீற்றிருப்பார்கள் என்றார். II இராஜாக்கள் 10:31 ஆனாலும் யெகூ இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நியாயப்பிரமானத்தின் படி தன் முழு இருதயத்தோடும் நடக்கக் கவலைப்படவில்லை. இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணின யெரொபெயாமின் பாவங்களை விட்டுஅவன் விலகவும் இல்லை. II இராஜாக்கள் 10:32 அந்நாட்கள் முதல் கர்த்தர் இஸ்ரவேலைக் குறைந்து போகப்பண்ணினார் என்று வாசிக்கிறோம்.

வைராக்கியம் என்பது கர்த்தருக்காக உண்மையுள்ள வைராக்கியம் பாராட்டுவது தான். விசுவாசத்தினால் உடனடி கீழ்படிதல். நீதிமான்களை துணைக்கு அழைத்தல் யோனதாபை இரதத்தில் ஏற்றினார். தேவனுடைய வார்த்தைக்காக செயல்படுதல். வைராக்கியம் என்பது நம் பலத்தில் இல்லை.நான் செய்ய வேண்டும் என்ற பிடிவாதமும் இல்லை கர்த்தர் என்னோடே இருக்கிறார் என்ற நம்பிக்கைதான். தேவன் கொடுக்கிற பெலத்தோட நாம் ஓடும்போது வழியில் நிற்க்க மாட்டோம். நல்ல விஷயத்தில் வைராக்கியம் வேண்டும். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

கிறிஸ்துவுக்குள்
Sis. டெய்சி எபிநேசர்.

## வாலிபர் பகுதி

## பிரியமானவன்

மத்-17:5-2 அவர் பேசுகையில் இதோ ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டு இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். என்று பரிசுத்த ஆவியானவர் மூலம் பிதா தன் குமாரன் மேல் உள்ள அன்பை வெளிப்படுத்துகிறார்.

நாமும் பிரியமான பிள்ளைகளாக சாட்சியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் வாழ தேவன் பிரியப்படுகிறார். தானி-9:23-ல் நீ மிகவும் பிரியமானவன் என்று தானியேலைப் பார்த்து அவருடைய தூதனை வைத்து பேசுகிறார். நம்மை பார்த்துப் பிரியமானவனே, எனக்கு பிரியமான பிள்ளையாக வாழ வேண்டும் என்பதே அவருடைய ஆசை என்று தெளிவுபடுத்துகிறார்.

## 1. யார் மேல் பிரியமாயிருக்கிறார் ?

கர்த்தரை குறித்து மேன்மை பாராட்டுகிறவன் எரேமி–9:24 மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும், நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதை குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இவைகளின் மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே செல்வத்தையும் கதவுகளையும் ஆளுமைகளையும் குறித்து மேன்மை பாராட்டுவானாகில் அவன் விழுந்து விடுவான். மேட்டிமை பெருமை என்ற எண்ணங்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தை பிரியமான வாழ்க்கை வாழ விடாமல் பரலோக ஜீவியத்தை இழந்து விட வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகிறார்கள். எனவே தேவன் தந்த நல்ல ஜீவியத்தில் தேவனுடைய கிருபையும் நியாயத்தையும் நீதியையும் குறித்து மட்டுமே மேன்மை பாராட்டுகிறவன் தேவனுக்கு பிரியமானவன் என்று வேதம் கற்றுத்தருகிறது.

## 2. வேதத்தில் பிரியமாயிருக்கிறவன்...

சங்கீ–1:2–ல் வாசிக்கும் போது கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவு பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். இன்றைய சூழ்நிலையில் உலக அளவில் புள்ளி விவரம் கூறுகிறது. அநேக நபர்கள் தங்களது நேரத்தை சமூக வலைதலத்தில் தான் செலவு செய்கிறார்கள். ஆனால் தேவனுடைய பிள்ளைகள் தேவனில் அன்பு கூறுகிறவர்கள் எப்போதும் வேதத்தில் தியானமாயிருப்பார்கள். உம்முடைய வேதம் என் மன மகிழ்ச்சியாய் இராதிருந்தால் நான் துக்கத்தில் அமிழ்ந்து போயிருப்பேன் என்று தாவீது கூறுகிறார்.

நாம் சோர்ந்து போகிற சூழ்நிலையில், நம்மை சுற்றி எல்லாமே அசாதரனமாக இருந்தாலும் தேவனுடைய வார்த்தைகள் எப்போதும் நம்மை தேற்றுகிறதாகவே உள்ளது. நம்முடைய வாழ்க்கயில் எத்தனை முறை தேவ வார்த்தைகள் நம்மை தேற்றி வாக்கு தத்தத்தை நிறைவேற்றி இருக்கிறார் என்று சிந்தித்து அவருக்கு நன்றி கூறுவோம்.

நம்மை பார்த்து என் பிரியமே நீ ரூபவதி என்று கூறும் போது நம் உள்ளத்தில் எத்தனை ஆனந்தம் ஆகவே அவருக்கு பிரியமான வழியில் நடந்து பரலோக ராஜ்ஜியத்திற்கு சொந்த பிள்ளைகளாவோம்.

**கிறிஸ்துவின் பணியில்**

**ATC Youth Team**

Be an Example : I Timothy 4:12

Once there lived a poor man who helped the poor. He was also a prayerful man. He reads Bible everyday and walked with God. One day a tsunami approached the city that he was living. Everyone was scared because it was raining heavily, and lighting struck also. 100 people rushed to a big school for shelter. The good man was one of them. In front of the school a big tree was there. All the people were struck in the school nowhere to go. the poor man even in this situation prayed to God. God told him “Fear not, for iam with you. climb the tree and keep waving your hands.”

Every one else was crying and murmuring and grumbling. But the poor man did exactly what God told him to do. some people said the lightning would strike him if he climbs the tree. But he did not fear. at last after 3 days one helicopter came searching if any people are alive. This poor man waved his hand and the people in the helicopter found him. They came to the school and rescued the poor man and all other people with him. God hears our prayers and saves us. He saves us and also the people with us.

He who is kind to the poor lends to the lord and He will reward him for what he has done. proverb-19:17

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் ( ஆதி-12:2 ) "

சகோ. கிதியோன் செங்குட்டுவன்
செல்வி.மோனிகா ஷெர்லின்
செல்வி.லிடியா ஆரோக்கியதாஸ்
செல்வன்.ஆல்வின் ராஜ்
சகோதரி.ஜரின் நிஷா
செல்வன்.அமீஷ்
சகோ.ஷர்மன் ராஜ்
சகோ. ஜான் போஸ்கோ
செல்வி.டெலிஷா காட்லின்
சகோ.R.ஜெகநாதன்
சகோதரி.செலின் டேவிட்
சகோதரி.ஷீலா இன்பராணி
செல்வன் சந்தோஷ் ரவி ஜான்பீட்டர்
செல்வன் மிதுன்ராஜ்
சகோதரி.சுபா ஸ்டீபன்
சகோ.மணிராஜ்
சகோதரி.இவாஞ்சிலின் ராஜா கிறிஸ்டி

செல்வன்.பிரேயன்
சகோதரி.தீபா ராஜன்
செல்வன்.டோவின் திவ்யராஜ்
சகோ.விக்டர் செங்குட்டுவன்
சகோதரி.தெபோராள் ஹனி மெர்சி
செல்வி.லாவன்யா
சகோதரி.அல்ஜியா மேரி
சகோதரி.ரீனா வேளாங்கன்னி
செல்வன்.ஆரோன் டேனியேல்
சகோதரி.பிரதீபா ஷெரினா
சகோ.தினேஷ்குமார்
செல்வி.ஜேரல் ஜெனிகா
சகோதரி.பிளஸ்ஸி பியூலா வில்சன்
செல்வன்.கெவின் ஆஷ்ரே
செல்வி.ரின்சி வேளாங்கன்னி

# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்



கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)



திருமதி. திரு. ஞான விஜயன் & ஆமி ஜாய் சுகின்

திருமதி. திரு. வில்சன் செல்லையன் & குமுதினி

திருமதி. திரு. பிராங்க்ளின் & அருள் நான்சி

திருமதி. திரு. ரவி ஜான் பீட்டர் & பாக்யா

திருமதி. திரு. மார்க் ஆண்டனி & மாஸ்கெரெனஸ்

"

# 2026 – செப்டம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/09/2026 | Sis. ஷீபா பிரசாத் | Sis. எப்சி சாம் ஆனந்த் |
| 13/09/2026 | சகோ. சதீஷ்குமார் | சகோ. தாமஸ் |
| 20/09/2026 | Sis. செலின் டேவிட் | Sis. ஆஸ்லின் சுபின்சிங் |
| 27/09/2026 | சகோ. கிறிஸ்டோபர் | சகோ. ஜான்சன் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/09/2026 | சகோ. வெங்கடேஷ் | சகோ. ஆண்டனி |
| 11/09/2026 | சகோ.வேலு ராமர் | சகோ. ஸ்டாலின் |
| 18/09/2026 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 25/09/2026 | சகோ. V. எபினேசர் | சகோ. ஜெகநாதன் |

### ஆராதனை ஒழுங்குகள்

**சங்கிலி தொடர் ஜெபம்**

03/09/2026 மாலை 6:00 முதல் 04/09/2026 காலை 6:00 வரை

**10/09/2026**
முழு இரவு ஜெப ஆராதனை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம்– 10:00PM - 1:00AM

**12/09/2026**
சகோதரிகள் ஐக்கிய கூடுகை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 6:30PM - 8:15PM
வேத வினா பகுதி – யாக்கோபு,I பேதுரு, II பேதுரு

**25/09/2026**
வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 6:30PM - 8:15PM
வேத வினா பகுதி– எஸ்றா, நெகேமியா, எஸ்தர்

**26/09/2026–Saturday**
Area Prayer Cell
Time-6:30-7:30

**சனிக்கிழமை**
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி
நேரம் – மாலை 3:30 முதல் 5:30 வரை

**திங்கட்கிழமை**
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 3:30 முதல் 5:30 வரை

**செவ்வாய்கிழமை**
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி
நேரம் – மாலை 7:00 முதல் 8:30 வரை

**வியாழக்கிழமை**
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2026 செப்டம்பர் மாதத்திற்கான வேத வினா!



**கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. பலமுள்ள பெண்கள் யார் ?
2. உமமுடைய ஜனங்களிடத்தில் குற்றம் இருக்க, உமது அடியாராகிய நாங்கள் அடிக்கப்படுகிறோம் என்றது யார் ?
3. இஸ்ரவேலரைக் கொல்ல எதிரிகள் கையில் பட்டயம் கொடுத்ததாக சொல்லப்பட்டவர்கள் யார் ?
4. எகிப்தியர் இஸ்ரவேல் புத்திரருக்கு எதைக் கசப்பாக்கினார்கள் ?
5. எகிப்து தேசத்தை மூடிக் கொண்டது எது ?
6. கதிர்ப் பயிராய் இருந்தது எது ? தாள் பயிராய் இருந்தது எது ?
7. மோசே தன் கைகளை கர்த்தருக்கு நேராக விரித்தபோது நின்றது எது ?
8. எதின் நிமித்தம் மந்திரவாதிகளும் மோசேக்கு முன்பாக நிற்க கூடாதிருந்தது ?
9. தேவன் சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர வழியாய் சுற்றிப் போகப் பண்ணியதன் நோக்கம் என்ன ?
10. எதினால் ஜலம் குவிந்து நின்றது என்று கர்த்தரைப் புகழ்ந்து பாடினார்கள் ?
11. பாளயத்தை சாயங்காலம் எது மூடிக் கொண்டது ?
12. ரெவிதீமில் இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ண வந்தவர்கள் யார் ?
13. தேவன் மோசேக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் செய்த யாவையும் எகிப்திலிருந்து இஸ்ரவேலர் புறப்பட்டதையும் கேள்விப்பட்டது யார் ?
14. யாரை தேவன் தண்டியாமல் விடார் ?
15. யோசுவா யுத்தம் பண்ணிய போது மலை உச்சிக்குச் சென்றது யார் ?

விடைகளை வருகின்ற 20-09-2026 க்குள்
(WhatsApp - +91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்

**" யாத்திராகமம் : 1–20 "**

அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

# 2026- ஆகஸ்ட் மாத வேத வினாவுக்கு விடை

1. கோபம் (யோபு 5:3)

2. மாம்சக் கண்கள் யோபு 10:4

3. சர்வாங்க தகனபலிகள் செலுத்தினான். (யோபு 1:5)

4. சொப்பனங்கள் (யோபு 7:14)

5. உம்முடைய கையை என்னைவிட்டுத் தூரப்படுத்தும்; உம்முடைய பயங்கரம் என்னைக் கலங்கப் பண்ணாதிருப்பதாக. (யோபு 15:21)

6. தன் சஞ்சலம் , நிர்ப்பந்தம் யோபு 6:3

7. மனுசனை யோபு 7:17,18

8. கிழச்சிங்கம் (யோபு 4:11)

9. கசப்பு. யோபு 9:18

10. மாயக்காரனின். யோபு 8:14

11. ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார். (யோபு 5:9)

12. தண்டிக்கிற, பாக்கியவான். (யோபு 5:17)

13. தேவனுடைய அந்தரங்க ஞானமும், சர்வ வல்லவருடைய சம்பூரணமும். (யோபு 11:7,8)

14. யோபு. யோபு 6:3

15. யோபுவின் நண்பர்கள். (யோபு 13:4)

## 2026- ஆகஸ்ட் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

சகோதரி. சுகந்தி
சகோதரி. ஜோன்ஸ் ராணி
சகோதரி. ஜெஸ்லட் வர்க்கீஸ்
சகோதரி. நித்யா ஜோன்ஸ்
சகோதரி. சாந்தி
சகோதரி. சினேகா எபிநேசர்
சகோதரி. சுபா ஸ்டீபன்
சகோதரி. ஜாஸ்மீன் பென்சாம்
சகோதரி. மரியகுளோரி

சகோதரி. மெர்சிலின் தயா
சகோதரி. ஜீனா சதீஷ்
சகோதரி. ஷீபா
சகோ.பக்தராஜ்
சகோ. எபிநேசர்
சகோ. பிபின்
சகோ. புஷ்பராஜ்
சகோ. டார்வின். S.
சகோ. பால்ராஜ்

# அடைக்கப்பட்ட கதவுகள் (closed Doors)

வெளி-3:20 இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில், நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன் அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.

மேலே சொல்லப்பட்ட வசனம் இரட்சிக்கப்படாதவர்களுக்கு என்று அநேகர் நினைப்பதுண்டு. ஆனால் உண்மையில் இந்த வசனம் லவோதிக்கேயா சபைக்கு எழுதப்பட்டிருக்கிறது. சபையில் உள்ள கிறிஸ்தவர்களுக்குத்தான் எழுதப்பட்டது. காரணம் என்ன? திருச்சபை

ஆண்டவராகிய இயேசுவை வெளியே தள்ளிவிட்டு கதவைச் சாத்தி விட்டது. திருச்சபையில் இயேசுவுக்கு இடமில்லை. என்ன பரிதாபம். வீட்டைக்கட்டடினவருக்கே வீட்டில் இடமில்லை. இன்று அநேக குடும்பங்களில் இதே நிலைமை தான். வயதான பெற்றோரை அநாதை விடுதி, முதியோர் இல்லங்களில் விட்டு விடுகிறார்கள். வேறு யாரும் அல்ல. சொந்தப்பிள்ளைகளே அவர்களை விரட்டி விடுகிறார்கள். எப்போதாவது முதியோர் இல்லத்தில் போய் அவர்களை பார்த்து வருவார்கள். பிள்ளைகளைப் பார்த்தவுடன் முதிர்ந்த பெற்றோர் கண்களில் கண்ணீர்தான் வரும். உன்னை எப்படி தாலாட்டி சீராட்டி வளர்த்தேன், எங்களைவீட்டை விட்டு விரட்டி விட்டாயே. வீட்டில் எங்களுக்கு ஒரு இடம் கொடுக்க மாட்டாயா? பெற்றோரின் கண்ணீர்தான் கதவைத் தட்டும் சத்தம்.

ஆண்டவராகிய இயேசு கண்ணீரோடு வாசற்படியில் நின்று தட்டுகிறார். இயேசுவை தெருவிலே நிற்கவைத்து வேடிக்கைப் பார்க்கும் கிறிஸ்தவர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். நம்முடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது? நிதானித்துப் பார்ப்போம். 1 அடைக்கப்பட்ட கதவுகள் நம்முடைய வாழ்க்கையில் இருக்கிறதா? மூன்று விதமான அடைக்கப்பட்ட கதவுகளைக்குறித்து நாம் தியானிப்போம்.

## 1. அவிசுவாசம் என்னும் கதவு (Door of Unbelieving)

அவிசுவாசம் என்பது ஒரு ஆறிப்போன காபி. சூடான காபி நன்றாக இருக்கும் அநேகர் விரும்பிக்குடிப்பார்கள். இப்பொழுதெல்லாம் உழடன உழகககநந (குளிர்ந்த காபி) வந்து விட்டது. இதை வாலிபர்கள் விரும்பிக்குடிக்கிறார்கள். ஆனால் ஆறிப்போன வெதுவெதுப்பான காபியை யாரும் விரும்புவதில்லை. அநேகருடைய ஆவிக்குரிய வாழ்க்கை

வெதுவெதுப்பில் ஆறிப்போன காபியைப் போல் ஆகிவிட்டது. காரணம்– அவிசுவாசம். இயேசுவைப் பார்த்து நடந்தவர்கள், சூழ்நிலைகளை, உலகத்தைப் பார்க்கத் துவங்கியபோது, விசுவாசம் பறந்து போனது. வார்த்தையை நம்பினவர்கள், இன்று வருமானத்தைப் பார்க்க துவங்கி விட்டார்கள். காரணம் சூழ்நிலைகள் அவர்கள் விசுவாசத்தை பறித்துக்கொண்டது.

எம்மாவுக்கு போகும் சீஷர்கள், அவிசுவாசத்தோடு நடக்கிறார்கள். சீஷர்களாய் இருந்தவர்கள் அவிசுவாசிகளாய் மாறிப்போனார்கள். தேவனுடைய வீட்டை விட்டு (எருசலேம்) விலகிப்போகிறார்கள். இயேசுவை வெளியே வீதிக்குத் தள்ளிவிட்டார்கள். ஆனாலும் இயேசு அவர்களைத் தேடி வந்தார். வீதியிலேயே அவர்களை சந்திக்கிறார். வசனங்களைக் கொண்டு அனல் மூட்டுகிறார். உணர்த்தப்பட்ட சீஷர்கள். இயேசுவுக்கு வீட்டின் கதவைத் திறந்துக் கொடுத்தார்கள். உள்ளே போஜன வேளையில், இயேசு அவர்களுடைய அவிசுவாசக் கண்களைத் திறந்தார். நாம் கூட வேத வசனங்களை வாசித்து தியானித்து, அவிசுவாசத்தை மேற்கொள்வோம். விசுவாசத்தில் வளர்வோம்.

## 2. சுயநீதி என்னும் கதவு (Door of self Righteousness)

என்னுடைய பரிசுத்தம், என் ஞானம் பெலன் எனக்குப் போதும், தேவ ஒத்தாசை தேவையில்லை, என் சுய பெருமை,தாலந்து என்னைப் பரலோகம் கொண்டு போய் சேர்க்கும் என மணற்கோட்டை கட்டுவோர் அநேகர் இருக்கிறார்கள். என்னிடத்தில் ஒரு குறையும் இல்லை என்று லவோதிக்கேயா திருச்சபையைப் போல மார் தட்டிக் கொள்ளுகிறார்கள். ஆயக்காரனை மட்டம் தட்டின பரிசேயனும் தன்னை அப்படித்தான் உயர்த்திக்கொண்டான், ஐயோ, பரிதாபம். இவையெல்லாம் செல்லாக் காசு என்று அறியாமல் இருக்கிறார்கள். எனவே தான் இப்படியாய் பக்தன் ஒரு பாடலைப் பாடுகிறான்.

"என் ஞானம் கல்வி செல்வங்கள் எல்லாம்
ஒன்றுமில்லை குப்பையென்றெண்ணுகிறேன்
என் நீதி நியாயங்கள் அழுக்கான கந்தை
என்றே உணர்ந்தேன் என் இயேசுவே"– அனுதினமும்...

பவுல் என்ற பரிசேயன், தன் சுயநீதியை நம்பி வாழ்ந்து வந்தான். அவன் இருயத்தில் இயேசுவுக்கு இடமில்லை. காரணம் சுயநீதி என்னும் கதவு அவன் வாழ்வில் தடையாய் இருந்தது. ஆனால் இயேசு

தமஸ்குவுக்குப் போகும் வீதியிலே பவுலை சந்திக்கிறார். நீ துன்பப்படுத்துகிற கிறிஸ்து நானே என்று வெளிப்படுத்தினார். இயேசுவுக்கு இதயத்தில் இடம் கொடுத்தான். சுயநீதி என்னும் கதவை சுக்கு நூறாய் உடைத்துப் போட்டான். "அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன்" (பிலி-3:11) மனந்திரும்பின பவுலின் வார்த்தைகள் இது. என்னிடத்தில் குறை எதுவுமில்லை, நான் ஒரு பாசுத்தவான் என்று சுயநீதியைக்குறித்து பெருமை பாராட்டுகிறோமா? தேவனுடைய சமூகத்தில் நம்மைத் தாழ்த்துவோம். தற்பரிசோதனை செய்து கொள்வோம் தேவ நீதியை சார்ந்து வாழ்வோம்.

### 3. கீழ்ப்படியாமை என்னும் கதவு (Door of Disobedience)

" என் சத்தத்தைக் கேட்டு கதவைத்திற" கீழ்படிதலை ஆண்டவர் விரும்புகிறார். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாளை ஆண்டவராகிய தேவன் விரட்டி விட்டார் என்று சொல்வார்கள். ஆனால் அதற்கு முன்பதாகவே ஆதாமும், ஏவாளும் விரட்டி விட்டார்கள். அவருடைய வார்த்தையை அறிந்திருந்தார்கள். மறக்கவில்லை. ஆனால் பிசாசு சோதித்த போது பிசாசின் சத்தத்திற்குக் கீழ்படிந்தார்கள். தேவ சத்தத்தை உதாசீனப்படுத்தினார்கள். தேவசாயலை இழந்தார்கள். தேவ மகிமையை இழந்து நிர்வாணிகளானார்கள். பரிசுத்தத்தை இழந்தார்கள். பாவ இருள் கண்களை குருடாக்கினது. ஒளிந்து கொண்டார்கள். ஆனால், அன்பான தேவன் அவர்களைத் தேடி வந்தார். ஒரு வஸ்திரத்தை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார். தேவன் இரட்சிப்பின் திட்டத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

ஆண்டவராகிய இயேசு. பூமியிலே வந்து நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து மூன்றாம் நாளில் உயிரோடே எழுந்தார். அவருக்கு நம்முடைய வாழ்க்கையில் இடங்கொடுப்போம் மூடப்பட்ட கதவுகள் இருந்தால், அதை தகர்த்தெறிவோம். மரியாள் நல்ல பங்கை தெரிந்துகொண்டாள். மார்த்தாளோ, அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டாள். மூடப்பட்ட கதவுகள் மார்த்தாளிடம் இருந்தது. நாம் எப்படி? சிந்திப்போம், செயல்படுவோம், தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

# Kids Corner

## SEPTEMBER MONTH QUIZ FOR CHILDREN

1. Who received Hebron as an inheritance ?
2. Where did Joshua cast lots to Devide the land ?
3. Who was Joshua's Father ?
4. What was the name of the city given to Joshua ?
5. How many cities of refuge were appointed ?
6. Why were cities of refuge appointed ?
7. What did the Lord give Isreal after giving them the land ?
8. What did the two and a half tribes build rear Jordan ?
9. Why did they build the alter ?
10. What famous statement did Joshua make his family ?

***Kids Find the answer from the Book of***

" JOSHUA : 13 – 24 Chapter's "

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !
தாங்கள் இந்திய தேச மிஷினரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.தாஸ் கருணா அவர்களிடத்திலும். திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. பிராங்க்ளின் அவர்களிடத்திலும், போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரன் அவர்களிடத்திலும், ஆலய கட்டுமான ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. சாம் ஆனந்த் அவர்களிடத்திலும், கொடுத்து ஊழியத்தை தாங்கமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
நன்றி

# ANSWER'S FOR THE MONTH OF AUGUST

1.Joshua – Joshua 1:1,2
2.Rahab – Joshua 2:1-6
3.A scarlet cord – Joshua 2:18
4.Twelve stones – Joshua 4:3
5.Gilgal – Joshua 4:20
6.They fell down flat – Joshua 6:20
7.Achan – Joshua 7:1
8.A babilonish garment, silver, and a wedge of gold – Joshua 7:21
9.Mount Gerizim and mount Ebal – Joshua 8:33
10.The sun stood still and the moon stayed – Joshua 10:12,13
11.Five Kings – Joshua 10:16,17
12.Thirty one Kings – Joshua 12:24

But Jesus called them unto him, and said, Suffer little children to come unto me, and forbid them not: for of such is the kingdom of God.
Luke 18:16

## CHILDREN WHO WROTE THE ANSWERS FOR THE MONTH OF AUGUST

Ebisha
Adriel
Andrea
Aran Rajaselvan
Rheul Ashkinaz
Riya Priti
Abel

Jerald
Joel
Felisha
Feshika
Mary Hannaani
Mahendrika Sri
Dion Bensam

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

### முதன்மை ஊழியர்

**BRO. ஆரோக்கியதாஸ் . P**
99870126

### செயலாளர்

**BRO. தாமஸ்**
66810423

### பொருளாளர்

**BRO. ஜான்சன்**
97610275

### வாலிப ஐக்கிய தலைவர்

**BRO. M. கிறிஸ்டோபர்**
67096449

### பெண்கள் ஐக்கிய தலைவி

**SIS. டெய்சி எபினேசர்**
60686612

என் ஆத்துமா கர்த்தரில் களிகூர்ந்து, அவருடைய இரட்சிப்பில் மகிழ்ந்திருக்கும்.
சங்கீதம் *35:9*

Church e-mail ID - ahmaditamil.kw@hotmail.com
Church Website Address - ahmaditamilchurch.com

www.ahmaditamilchurch.com
Follow: ATC Tamil | YouTube | Facebook | Instagram

PRIVATE CIRCULAR ONLY